செய்தி வெளியீடு எண்: 757 நாள்: 06.11.2019

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 5.11.2019 அன்று தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் 4–வது உலகக் கோப்பை வளையப்பந்து (டென்னிகாய்ட்) வாகையர் போட்டியில் குழுப் போட்டிகளில் ஆடவர் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற 3 வீரர்கள், மகளிர் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற 2 வீராங்கனைகள் ஆகியோருக்கு தலா 10 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும், 2018–ஆம் ஆண்டிற்கான சதுரங்க விளையாட்டில் சர்வதேச மாஸ்டர் பட்டம் வென்ற செல்வன் டி. குகேஷ் அவர்களுக்கு 3 லட்சம் ரூபாய்க்கான காசோலையும், சென்னையில் தேசிய அளவிலான வளைகோல்பந்து வாகையர் விளையாட்டுப் போட்டிகளை நடத்திய ஹாக்கி யூனிட் ஆஃப் தமிழ்நாடு அமைப்பின் நிர்வாகிகளுக்கு 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையும் வழங்கினார்கள்.

அகில இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி வாகை சூடும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத் தொகை வழங்குதல், சர்வதேச அளவில் பங்கு பெறும் விளையாட்டு வீரர்களுக்கு நிதியுதவி அளித்தல், மாணவர்கள் தங்கி விளையாட்டில் பயிற்சி பெற விளையாட்டு விடுதிகள் ஏற்படுத்துதல், கிராமப்புற விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் கிராம விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல், மாவட்ட விளையாட்டு மைதானங்களை மேம்படுத்துதல், பாரம்பரிய விளையாட்டுகளை ஊக்குவித்தல் போன்ற பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

அந்த வகையில், கடந்த 31.7.2018 முதல் 9.8.2018 வரை பெலாரஸ் நாட்டின், மின்ஸ்க் நகரில் நடைபெற்ற 4–வது உலகக் கோப்பை வளையப்பந்து (டென்னிகாய்ட்) வாகையர் போட்டிகளில் இந்தியாவின் சார்பாக கலந்து கொண்டு குழுப் போட்டிகளில் ஆடவர் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த

திரு. இ. அறிவழகன், திரு. ஜி. திருஞானம், திரு. எஸ். அபிஷேக் மற்றும் மகளிர் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற செல்வி எ.ரம்யா மற்றும் செல்வி கே. கீர்த்தனா ஆகியோருக்கு தலா 10 லட்சம் ரூபாய் வீதம், மொத்தம் 50 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும்;

2018–ஆம் ஆண்டிற்கான சதுரங்க விளையாட்டின் சர்வதேச மாஸ்டர் பட்டம் பெற்றுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த செல்வன் டி. குகேஷ் அவர்களுக்கு 3 லட்சம் ரூபாய்க்கான காசோலையும்;

கடந்த 7.1.2019 முதல் 20.1.2019 வரை சென்னையில் தேசிய அளவிலான வளைகோல்பந்து வாகையர் விளையாட்டுப் போட்டிகளை நடத்திய ஹாக்கி யூனிட் ஆஃப் தமிழ்நாடு நிர்வாகிகளுக்கு 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையும்;

என மொத்தம் 63 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 5 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள், சர்வதேச சதுரங்க மாஸ்டர் பட்டம் வென்ற செல்வன் டி. குகேஷ் மற்றும் ஹாக்கி யூனிட் ஆஃப் தமிழ்நாடு அமைப்பின் நிர்வாகிகள் ஆகியோருக்கு வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு கே.ஏ.செங்கோட்டையன், தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் திரு. தீரஜ் குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முதன்மைச் செயலாளர் / உறுப்பினர் செயலர் திரு. ரமேஷ் சந்த் மீனா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**